Registered No. M. 5068.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1. { சர்வதாரி-ஆ சித்திரை-மீ 7உ 19—4—1948 ஹிஜிரி 1367 ஜமாதிலாஹர்-மீ 9உ திங்கட்கிழமை. } இதழ் 13

உள்ளங்களை இணைக்கவல்ல ஆஸாத்

சகிப்புத் தன்மையே மத போதனை.

—[சுந்தர்லால்]—

இன்று காங்கிரஸ் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் பார்க்கிறேன். முஸ்லிம்களின் போக்கையுப், ஹிந்துக்களின் நடவடிக்கைகளையும், கூர்ந்து கவனித்தும் வருகின்றேன். நான் காங்கிரஸ் அங்கத்தினனல்ல, ஊழியனே. காங்கிரஸ் பக்தன் என்பதை, முதலில் அறிவித்துவிட ஆசைப்படுகின்ம்றன். ஒரு சிப்பாயாக. நான், இங்கு இருந்து வரும் வரை, மாகாண காங்கிரஸ் தலைவர் உத்திரவுகளுக்கு கீழ்படிந்து, நடந்துக்கொள்ளுவேன்.

மௌலானா அபுல்கலாம் ஆஸாத், 'ஐக்கிய முன்னேற்ற கமிட்டி' என்றபெயரால், ஒரு கமிட்டி அமைத்துள்ளார். ஹிந்து, முஸ்லிம்களின் உடைந்த உள்ளங்களை, மீண்டும் இணைப்பது, அவர் ஒருவரால் மட்டுமே சாத்தியம் இங்கு கமிட்டி அமைந்தாலும், அமையாவிட்டாலும், கமிட்டியின் தலைவன் என்ற முறையிலல்லாது, உங்களுடைய தொண்டன் என்ற முறையிலே பேசுகின்றேன். ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி அரசியல் சம்பந்தமுள்ள ஸ்தாபனமல்ல. (அரசியலில் பங்கு கொண்டாலுங்கூட அது முற்றிலும் பொருந்தும்.) ஹிந்து, முஸ்லிம் ஐக்கியத்தை லட்சியமாகக்கொண்ட கூட்டு கமிட்டியாகவே இருந்துவரும். மத்திய கமிட்டி சார்பாக வெளிவரவிருக்கும் பத்திரிகை, ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்திற்காகவே உழைக்கும். இது, ஒரு தனி இஸ்லாமிய ஸ்தாபனமல்ல. முஸ்லிம் அல்லாதார், ஹிந்துக்கள், சீக்கியர்கள், பார்ஸிகள் முதலிய யாவரும், அதில் மெம்பர்களாக சேரலாம். சட்டசபை தேர்தல்களுக்கும் அதற்கும் கொஞ்சமும் சம்பந்தமிருக்காது.

என்னருமை நண்பர்களே! உண்மையான ஐக்கியம் நிலவியிருந்த 1920—21-ம் வருஷங்களை சிறிது நேரத்திற்காக எண்ணிப்பாருங்கள். அப்பொழுதிருந்த ஒற்றுமையை, ஸ்வாமி சிர்த்தானந்தர், டில்லி ஜாமியா மசூதியின் மிம்பர் (பிரசங்கமேடை) மீது நின்று பிரசங்கம் செய்ததைக் கொண்டு, நாம் ஊகிக்க முடியும். இன்று பசு வதையைக் குறித்து சண்டைகள் நடக்கின்றன. இன்று, பல ஜில்லாக்களில் பக்ரீத் பண்டிகையின்போது, ஒரு பசுவும் அறுக்கப்படவில்லை. அவ்விதம் யாரும் விரும்பவில்லை என்பது உண்மையே.

அன்புர்களே! சுதந்திரமாக, உள்ளத்தைத் திறந்து; உண்மையை உங்களுக்கு எடுத்துறைக்க ஆசைப்படுகிறேன் ஜெயிலிலிருந்துவிடுதலை அடைந்து ஒரு கூட்டத்தில் பேசுகையில், "7 கோடி முஸ்லிம்களை வேத தர்மத்தில் சேர்ப்பேன்" என்று சுவாமி சிர்த்தானந்தர் பேசிவிட்டார். பிறகு நடந்ததென்ன! முஸ்லிம்கள் கொந்தளித்தனர். அதன் பிறகு சுத்தி, சங்கடன், தன்ஜீம், தப்லீக் கிளர்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவைகளின் அருவருக்கத்தக்க நடவடிக்கைகள் இங்கு பிரஸ்தாபிக்கப்படுவதும் உகந்ததல்ல. அத்ன் விளைவாக பரஸ்பர வேற்றுமை விஷம் உள்ளங்களிலே இடம் பெற்றுவிட்டது அதையடுத்து தேர்தல்கள் வந்தன. ஹிந்துக்களை பாதுகாக்கவும் முஸ்லிம்களை காப்பாற்றவும் தனித்தனி ஸ்தாபனங்கள் தோன்றின. இரு தரப்பிலும் மனக்கசப்பு வளர்ந்தது. முஸ்லிம்கள் தங்களுடைய கிளர்ச்சிகளை ஆரம்பித்தனர். "முஸ்லிம்கள் தங்களுடைய உரிமைகளைக்

கேட்டால் அவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் பிரதேசங்களை தனியாக பிரித்துவிட வேண்டும்," என்று லாலாலஜபதி ராய் எடுப்பாகச் சொல்லிவிட்டார். அப்பொழுது முஸ்லிம் தலைவர்கள் லாலா லஜபதிராயின் யோஜனையை வெறுத்தனர். எங்களை இந்தியாவிலிருந்து வெளியேற்ற லாலா லஜபதி ராய் முயற்சிக்கின்றார் என்று முஸ்லிம்கள் மன வேதனையடைந்தனர். அதுவரை பாகிஸ்தான் என்ற பெயர் கூட முஸ்லிம்களுக்கு தெரியாமலே இருந்தது. பிறகு ஸர் அல்லாமா இக்பால் பாகிஸ்தான் எண்ணத்தைத் தோற்றுவித்தார். லாகூரில் அதன் உருவம் தீட்டப்பட்டது. முஸ்லிம் லீக் வெளியில் வந்த சமயத்தில் வகுப்பு வாத உணர்ச்சி ஹிந்து மஹாசபை மேடையிலிருந்துதான் பிறந்ததென்று நண்பர் காட்கில் சொன்னார். மகாத்மாஜியின் வாழ்நாளும் என்னுடைய வாழ்நாளும் அதைக் குறித்து கண்ணீர் வடிப்பதிலேயே கழிந்துவிட்டது. ஒற்றுமைக்காக சாத்தியமான எல்லா முயற்சிகளும் செய்தோம். அரசியலுடன் அதற்கு சம்மந்தமில்லையாயினும் மக்கள் உள்ளங்களுடன் அது சம்மந்தம் கொண்டிருக்கிறது மகாத்மா காந்தியின் மறைவால் ஹிந்துக்கள் தகப்பனை இழந்துவிட்டனர் என்று ஒரு நண்பர் சொன்னார். ஆனால் முஸ்லிம்கள் தகப்பனை இழந்து விட்டனரென்று ஒரு பிரபல லீக் தலைவர் வருந்தினார். 1947 செப்டம்பர் 6-லிருந்து கடைசி நிமிஷம் வரை நான் மகாத்மாவுடன் இருந்தேன். ஜாதி மத வித்தியாசங்களையும் ஆசார ஏற்றத் தாழ்வுகளையும் ஒழித்துக் கட்டும்படியாக நான் என்னுடைய ஹிந்து சகோதரர்களுக்கு யோஜனை கூறுகிறேன். விசாலமான மனதுடன் புரட்சி நிறைந்த பரந்த உள்ளத்துடன் ஹிந்துக்கள் நண்ணுதற்குரிய முஸ்லிம்களுடன் சேர்ந்து பாடுபட வேண்டும். இரு தரப்பிலும் உள்ள குறுகிய மனப்பான்மையைப் போக்க முயற்சிக்க வேண்டும்.

சில காங்கிரஸ்காரர்களிடையே இன்று காணப்படும் குறுகிய மனப்பான்மைக்கு முஸ்லிம்கள் காங்கிரஸில் பெருமளவில் இல்லாமலிருப்பதே காரணம். முஸ்லிம்கள் காங்கிரஸை விட்டு வெளியேறாமல் இருந்திருந்தால் காங்கிரஸில் குறுகிய மனப்பான்மை ஏற்பட்டிருக்க முடியாது. நீங்கள் எங்களுடைய கைகளை பலப் படுத்துவதற்குப் பதிலாக பலஹீனப் படுத்தி விட்டீர்கள். நெஞ்சைத் தொட்டுப் பார்த்து பதிலளிக்குமாறு முஸ்லிம்களைக் கேட்டுக் கொள்கிறேன். "முஸ்லிம்களின் உரிமைகளை நீங்கள் கோரினீர்கள். 'பட்கே ரஹேகா ஹிந்துஸ்தான். லேகே ரஹேங்கே பாகிஸ்தான்' என்று கோஷித்தீர்கள். இப்பொழுது பாகிஸ்தானுக்கு போகாமல் ஏன் இருக்கின்றீர்கள்? உங்களுடைய உரிமைகளை பாகிஸ்தான் ஏன் பாதுகாக்கவில்லை?" என்று சில ஹிந்துக்கள் சொல்லுகின்றனர். இந்தியாவிலிருந்து முஸ்லிம்கள் அனைவரும் பாகிஸ்தானுக்கு சென்றுவிட்டால் எனக்கு தற்கொலையே சிறந்ததாகயிருக்கும். இங்கிருக்கும் முஸ்லிம்களெல்லாம் அங்கு குடியேறி அங்கிருக்கும் முஸ்லிம் அல்லாதார் அனைவரும் இங்கு வந்துவிட்டால் அது இந்தியாவுக்கு நாசத்தையே கொடுக்கும். இரண்டு டொமினியன்களிலும் ஹிந்து முஸ்லிம்கள் கலந்து வாழ்ந்தால் மட்டுமே ஒற்றுமை, ஐக்கியம் நிலைக்க முடியும். மதத்தை நரகத்தில் தூக்கி எறிந்து கம்யூனிஸ்டுகளாக மாறி விடுங்கள். அல்லது உண்மை மதஸ்தர்களாக இருங்கள். மனிதன் உண்மை மதஸ்தனாக இருந்தால் அவனுக்குள் சகிப்புத் தன்மை வளர முடியும். மற்றவர்களுடைய துக்கத்தை பகிர்ந்து கொள்ள முடியும். ஏதாவது ஒரு மதம் இதைக் கற்றுக்கொடுக்கவில்லையென்றால் அது மதமல்ல, சாபமே! வகுப்பு வேற்றுமையை தூண்டிவிடக் கூடியவர்களும், பாவத்தையும், புண்ணியத்தையும் ஒன்றாக பாவிப்பவர்களும் தலைவர்களல்ல. அம்மாதிரியானவர்களின் செயல்களுக்கு நாம் பிராயச்சித்தம் செய்தாக வேண்டும். ஹிந்து ராஜ்யம், முஸ்லிம் ராஜ்யம் என்று கோஷித்தவர்கள் அனைவரும் பாவத்தையே செய்திருக்கின்றனர். அதற்காக பச்சாதாபப் படுவதன் மூலமே பிராயச்சித்தம் செய்ய முடியும். கடந்த 30 வருஷ காலமாக நான் ஹிந்து என்று சொல்லிக்கொள்ளவில்லை. தங்களுடைய தவறுகளை உணர்ந்து உறுதியுடனும், நம்பிக்கையுடனும் இருந்து உயிர் விட்டிருக்க வேண்டும். அப்பொழுதும் வீடுகளை விட்டு வெளியேறியிருக்கக் கூடாது. ஒழுக்கத்தை கடைபிடித்து இங்கேயே வாழ்ந்து இங்குள்ள ஹிந்துக்களை உங்களுடைய அண்டையில் வசிக்கும் நண்பர்களாக மாற்றுங்கள். மானிட தர்மமும், ஒழுக்கமும், மதமும் அதுதான்.

அரசியல் அறிவு வளர்ச்சி அடைய

"ஆஸாத்"

அவசியம் படிக்கவேண்டும்.

திரும்பிச் சென்றால்

பாகிஸ்தான் நலியும்.

:: காயிதே ஆஜம் தூற்றப்படுவார் ::

நவாப் ஜாதா பிரலாபம்.

லாகூர், 7—4—48.

பாகிஸ்தான் பிரதமர் மிஸ்டர் லியாகத் அலிகான் இங்கு நடந்த போலீஸ் அணிவகுப்பில் கீழ்வருமாறு பேசினார். "உண்மையாகவே பாகிஸ்தானுக்காக பாடுபட விரும்பினால் நீங்கள் அந்தரங்க சுத்தியுடனும் நேர்மையுடனும் நடந்துகொள்ளவேண்டும் லஞ்சம் சம்மந்தப்பட்டவரை போலீஸுக்கு எதிராக சதா குறைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அவ்வித கெட்ட பெயரையும் களங்கத்தையும் நீங்கள் போக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அதிகாரிகள் தங்களுடைய போக்கை மாற்றிக்கொண்டு அதிகாரிகள் என்று நினைப்பதைவிட்டுபொதுஜன ஊழியர்களாக தங்களை பாவிக்கவேண்டும். பாகிஸ்தான் பெருமளவு தியாகங்களுக்குப் பிறகு கிடைத்திருக்கின்றது. பல லக்ஷம் மக்கள் கொல்லப்பட்டனர் வீடிழந்தனர்.

காராச்சியில் போலீசுக்கும் அகதிகளுக்கும் இடையே நடந்த கைகலப்பைப் பற்றி பேசுகையில் "போலீஸார் அமைதி, கட்டுப்பாட்டை பாதுகாக்க வேண்டும். அதே சமயத்தில் ஒருவர்மீதும் குறிப்பாக அகதிகள் விஷயத்திலும் அனாவசியமாய் பலாத்காரம் உபயோகிப்பது கூடாது. அகதிகள் பொறுமை, சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். நம்பிக்கையை இழப்பது கூடாது. இன்னும் பெருமளவில் தியாகங்களுக்கு அவர்கள் தயாராயிருக்க வேண்டும். உடனடியாக இந்தியா திரும்பிச் செல்லும் முடிவை அகதிகள் மாற்றிக்கொள்ள வேண்டும் அதனால் உங்களுடைய பாகிஸ்தானுக்கு அபக்கியாதியே எற்படும். காய்தே ஆஜம் தூற்றப்படுவார். பாகிஸ்தான் பலஹீனமடைந்துவிடும் நீங்கள் திரும்பிச் சென்றுவிட்டால் பாகிஸ்தான் உலகெங்கிலும் அபகீர்த்தியடையும்" என்று கேட்டுக்கொண்டார்.

நவாப் ஜாதாவின் வேண்டுகோள் பலனளிக்கவில்லை என்றே தெரிகிறது. தினம்ஒன்றுக்கு 5000க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் இந்தியாவுக்கு திரும்பிவந்த வண்ணம் இருக்கின்றனர். புளிச்ச ஏப்பக்காரர்களின் இஸ்லாமிய ராஜ்ய கோஷம் பசி ஏப்பக்காரர்களை அதிக நாள் மயக்கத்தில் வைத்திருக்க முடியவில்லை. இன்று முஸ்லிம்களை தங்கள் தாயகத்திற்கு திரும்பிச்செல்ல வேண்டாம் என்று கெஞ்சும் நவாப் ஜாதா பாகிஸ்தானிலிருந்து வந்த ஹிந்து சீக்கிய சிறுபான்மையோரை தங்கள் தாயகத்தை விட்டு வெளியேறவேண்டாமென்று கெஞ்சியிருந்தால் பாகிஸ்தானுக்கு அபக்கியாதி எற்பட்டிருக்க முடியாது. பாகிஸ்தான் தேடிக்கொண்ட அபகீர்த்தியை போக்கிக் கொள்வதற்கு முஸ்லிம் அகதிகளை திரும்பிச்செல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்வது பரிகாரமாக முடியாது பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய ஹிந்து, சீக்கியர்களை கெஞ்சிக்கூத்தாடி திருப்பி யழைத்து தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த அவர்களுடைய தாயகத்திலேயே நிம்மதியுடனும், அமைதியுடனும், சுதந்திரத்துடனும், பரிபூரண உரிமைகளுடனும் வாழ வழிச்செய்வதே பரிகாரமாகும். நவாப் ஜாதாவுக்கும் மிஸ்டர் ஜின்னாவுக்கும் ஆண்டவன் நேர்மையான வழி காட்டுவாராக.

"ஆஸாத்"

(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை)

தற்கால அரசியல் அறிவு வளர்ச்சியடைய அவசியம் படிக்கவேண்டும். சிக்கலான அரசியல் உலகத்தில் இன்று 'ஆஸாத்' சமூகத்தை நேரான பாதையில் முன்னேறச் செய்கிறது. சொற்பகாலத்தில் புது அரசியல் உணர்ச்சியை எங்கும் உண்டாக்கியிருப்பதை தாங்கள் கவனித்திருக்கலாம். உங்கள் ஊரில் 'ஆஸாத்' ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை. 'ஆஸாத்' சந்தாதாரர்களாக ரூ. 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர்,
"ஆஸாத்"
கும்பகோணம்.

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 19—4—'48 திங்கட்கிழமை { இதழ் 13

பாம்புக்கு பால் வார்க்க முடியாது.

இந்திய சர்க்காரின் தீர்மானமான பதிலுக்குப் பிறகும் நிஜாம் அரசியல் ஆலோசகர் ஸர் மாங்டனும், பிரதமர் லாயிக் அலியும் புது டில்லிக்கு வருகின்றனர். நயவஞ்சகமாய் பேசி, உள்நாட்டு அமைதியின் பேரால் இந்திய சர்க்காரிடம் தளவாடங்களும், பெட்ரோலும் கேட்பதே அவர்கள் நோக்கமாய் இருக்கலாம். இந்திய யூனியனில் சேர இதுவரை ஹைதராபாத் தயாராக இல்லை. வெள்ளையர் ஆலோசனைப்படி நடக்கும் வரை ஹைதராபாத் வழிக்கு வருமென எதிர்பார்க்க முடியாது. சமஸ்தானத்தில் ஆயுத உற்பத்தியும் நடப்பதாக சொல்லப்படுகிறது. ஸ்தம்பன ஒப்பந்த கெடு முடிவதற்குள் பூரண முஸ்தீப்புகள் செய்து கொள்ள நிஜாம் முயற்சிப்பதாகத் தெரிகிறது. புது டில்லிக்கு அடிக்கொரு தடவை ஓடிவருவதும் நல்ல பிள்ளைகள் மாதிரி நயமாய் பேசிவிட்டுப் போவதைத் தவிர பலன் ஒன்றையும் காணோம். கடைசியாக வந்த தூது கோஷ்டி சர்தார் படேலையும் மிஸ்டர் மேனனையும் பேட்டி காண முடியாமலேயே போய் விட்டது. இந்தியா கண்டிப்பாக நடப்பதை நாம் வரவேற்கிறோம். ஸர்தார் படேல் சகலவிதத்திலும் சமரஸத்துக்கு முயற்சித்து பார்த்துவிட்டார். பேச்சு வார்த்தை மூலம் சுமுகமாக பிரச்னை தீர்க்கப்பட போராட்டத்தை நிறுத்தி வைக்கும்படி சமஸ்தான காங்கிரஸ் பிரமுகர்களுக்கு யோசனையும் கூறினர். அதற்குப் பிறகும் ஹைதராபாத்துக்கு அந்தரங்க சுத்தி ஏற்படவில்லை. முடிவில் ஹைதராபாத்தை நேர்வழிப்படுத்த முற்றுகையைத் தவிர வேறு சிறந்த வழி இல்லாமல் போய்விட்டது. இன்று பல வாரங்களாக சமஸ்தானத்துக்குள் பெட்ரோல் போகவில்லை. ஆயுதங்களும் இனி போக முடியாது. ரயில்கள், மோட்டார்கள், லாரிகள் இந்திய எல்லையில் சோதிக்கப்படுவதுடன் விமான நடமாட்டமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஆயுதங்கள் பெட்ரோலுக்காக ஹைதராபாத் துடிப்பதற்கு அதுவே காரணம். யம்தச்சாதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள பகற் கனவு காணும் எந்த சமஸ்தானத்துக்கும் இந்தியா ஆயுதங்களோ, பெட்ரோலோ சப்ளை செய்வது தற்கொலைக்கொப்பாகும். இந்திய சர்க்கார் அம்மாதிரி தவறு செய்யாதென்று நம்புகிறோம். இச்சமயத்தில் பொறுப்பு வாய்ந்த சர்க்கார் அமைப்பதன் மூலம் இரண்டும் கெட்ட நிலைமைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது ஹைதராபாத் மக்கள் கடமையாகும்.

அரசனை நம்பி புருஷனை கைவிட வேண்டாம்

ஹைதராபாத் ஏஜெண்டுகள் தென்னாட்டிலும் வேலை செய்கின்றனர். மற்ற ஜில்லாக்களைவிட குறிப்பாக பெங்களூரிலும் மைசூர் சமஸ்தானத்திலும் அவர்கள் வாலாட்டம் அதிகமாய் இருந்துவருகிறது. பொருளாதார வரட்சியால் நின்றுவிடும் தருவாயிலிருந்த சில பெங்களூர் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஹைதராபாத்துக்கு போய் வந்த பிறகு புத்துயிர் பெற்றிருக்கின்றனர். பாமர ஏழை முஸ்லிம்களை மயக்கி ஹைதராபாத்துக்கு ஏற்றுமதி செய்யும் கங்காணிகளாய் அவர்கள் வேலை செய்து வருகின்றனர் ரயில் பிரயாணச் சிலவுகள் கொடுத்து ஹைதராபாத்துக்கு அனுப்ப முயற்சிக்கையில் அவர்களை கையும் களவுமாகப் பிடித்து முஸ்லிம்கள் போலீசாரிடம் ஒப்படைத்து விடுவதுதான் புத்திசாலித்தனமும் இந்திய டொமினியனிடம் தங்களுக்குள்ள விசுவாசத்தைக் காட்டிக் கொள்வதற்குள்ள சிறந்த வழியுமாகும். நிஜாம் ஏஜண்டுகளை தென்னாட்டு முஸ்லிம்கள் நரக தூதர்களாகவே பாவிக்க வேண்டும். முஸ்லிம்களை ஹைதராபாத்தில் குடியேற்றி அங்குள்ள முஸ்லிமல்லாதாரை வெளியேற்றுவதன் எதிரொலியால் நான்கு மாகாண முஸ்லிம்களுக்கு ஏற்படக்

தொண்டி சர்க்கிள் காங்கிரஸ் முதலாவது மகாநாடு.

காலை 9-மணிக்கு தலைவர்களுக்கு விமரிசையான வரவேற்பு அளிக்கப்பட்டது. முதலில் சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தை திரு S நடராஜ தேவர் திறந்துவைத்தார். D. R. அருணாசலம் கொடியேற்றினார். ஸ்ரீ S. சோமசுந்தர முதலியாரின் வரவேற்புரைக்குப் பிறகு பால பாரதி செல்லத்துரை மகாநாட்டைத் திறந்து வைத்தார். மகாநாடு R. V. சுவாமிநாதன் M. L. A. தலைமையில் ஆரம்பமாயிற்று. திரு S. ஷண்முகம், திரு ராம. அண்ணாமலை, S. P. நடராஜன் முறையே மகாத்மாஜி, பண்டித நேரு, நேத்தாஜி படங்களைத் திறந்துவைத்தனர். முதலில் மகாத்மாஜி மறைவுக்கு அனுதாப தீர்மானம் நிறைவேறிற்று. அடுத்தாற்போல் ராமனாதபுரம் ஜில்லாவுக்கு நீர்ப்பாசன வசதிகளின் அவசியத்தையும், தேவகோட்டை ரஸ்தாவிலிருந்து 28 மைலிலிருக்கும் தொண்டி வரை ரயில் போக்குவரத்து வசதி செய்து கொடுக்குமாறும் 12,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள தொண்டியில் மின்சார வசதி செய்து தருமாறும் தொண்டி துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி வசதி ஏற்படுத்துமாறும், உணவு தான்யம் கொண்டுவர அனுமதி கோரியும், தொண்டியில் சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் அவசியமென்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

தொண்டியின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக காங்கிரஸ் மகாநாடு நடந்ததும் மக்கள் அனைவரும் அதில் கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கதாகும். பகல் 1½-மணிக்கு M. காசிநாதன் வந்தனோபசாரம் கூற மகாநாடு முடிவடைந்தது. 500 ஏழைகளுக்கு மேல் சாப்பாடு போடப்பட்டது.

மாலை சர்தார் P. செல்லத்துரை தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தேவகோட்டை தேசபக்தர் R. M. அண்ணாமலை, கும்பகோணம் 'ஆஸாத்' பத்திரிகை ஆசிரியர் மௌலானா அப்துல் ஹக்கீம், மாணவர் முகம்மது அன்வார், S. ஏகநாதன், S. M. C. T. நாதன், தொண்டி ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் முதலியோர் பல விஷயங்களைபற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் மகாநாட்டுக் காரியதரிசி M காசிநாதன் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

S. சோமசுந்தரம்,
வரவேற்புக்கமிட்டி தலைவர்.

O O O

கோடல்வாஸி.

திண்டுக்கல் தாலுகா கோடல்வாஸி காங்கிரஸ் கமிட்டிக்கு திரு. தி கி மு. ஆ. பெருமாள் சாமி கவுடர் தலைவராகவும், திரு ஆர் ரெங்கசாமி ரெட்டியார் உபதலைவராகவும், திரு தி கே. மோகன சுந்தரம் காரியதரிசியாகவும், திரு. ஆ ரெ. துரைச்சாமி கவுண்டர் உபகாரியதரிசியாகவும், திரு. சு. சோமசுந்தரம் பொக்கிஷதாரராகவும் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்.

கூடிய அபாயத்தின் பயங்கரத்தை முஸ்லிம்கள் உணர வேண்டியதவசியம். 100-க்கு 90 ஆக இருக்கும் மெஜாரிடியை மைனாரிட்டியாக்கிவிட கனவு காணும் மடையர்களை முஸ்லிம்கள் நம்பினால் அவர்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். மிஸ்டர் ஜின்னாவால் வட இந்திய முஸ்லிம்கள் அழிந்தனர்; குட்டி ஜின்னா ரஸ்வியால் தென்னாட்டு முஸ்லிம்கள் பாதிக்கப்படாமல் காக்க வேண்டியது ஒவ்வொரு உண்மை முஸ்லிமுக்கும் கடமை. நிஜாம் ஆட்சி இஸ்லாமிய ஆட்சி அல்ல. யதேச்சாதிகாரமே. அதை தகர்ப்பதே முஸ்லிம்களின் வேலை. அதற்காகத்தான் இஸ்லாம் தோன்றியது. இனி இந்தியாவில் யதேச்சாதிகாரம் நிலைக்கப் போவதில்லை. நிஜாம் யதேச்சாதிகாரமும் இன்றை அல்லது நாளை மறைவது நிச்சயம். மக்கள் ஆட்சி ஏற்படத்தான் போகிறது. அந் நிலையில் வெளியிலிருந்து குடியேறியவர்கள் விட்டு வைக்கப்படமாட்டார்கள். அரசனை நம்பி புருஷனை கைவிட்டதைப் போல் இங்குள்ள தங்கள் வீடுகளை தடுக்கி விழுந்தால் படிக்கு பாதி என்ற விலைக்கு விற்றுவிட்டு ஓடியவர்கள் நாளை அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டு திண்டாடப் போவதை நினைக்க உள்ளம் பதறாமல் இருப்பதற்கில்லை. தவிர ஓடுபவர்களுக்கு இந்த உலகத்தில் இடமில்லை என்பதை முஸ்லிம்கள் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே தங்கள் மூதாதையர் நாட்டை தங்கள் நாடென எண்ணி சுயநலக்காரர்களின் வலையில் சிக்காமல் நம்பிக்கை, உறுதி, சகிப்புத்தன்மையுடன் தங்கள் தேச சகோதரர்களுடன் கலந்து உறவாடி அமைதியுடன் வாழும்படி முஸ்லிம்களை வேண்டுவதுடன் ஹைதராபாத் ஏஜெண்டுகளை ஜாக்கிரதையுடன் கண்காணித்து தென்னாட்டு அமைதியை காப்பாற்றும்படி சர்க்காரை கேட்டுக் கொள்ளுகிறோம்.

காரைக்குடி.

நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில், 6—4—48ல் ராமசாமி நாயக்கர் வீதியில் ஆரு. ஆ. ராம சொக்க லிங்கம் செட்டியார் தலைமையில் தேசீயவாரம் ஆரம்பிக்கப்பட்டது. மறு நாள் மாலை கழனிவாசல் ஹரிஜன குடியிருப்பில் திரு. பொன்னையா முதலியார் தலைமையில் கூட்டம் நடந்தது. டாக்டர், V. S. S. மணி, பரமசிவம்சொற்பெருக்காற்றினர்கள் 8-4-48ல் செக்காலை பொட்டலில் திரு மெய்யப்ப செட்டியார் தலைமையில் கூட்டம் நடந்தது. வேலுச்சாமி தேசீயகீதம் பாடினர். பொன்னையா முதலியார் டாக்டர் V. S. S. மணி தேசீயவாரத்தின் முக்கியத்தைப்பற்றியும், காந்தி தேசீய நிதி சம்மந்தமாகவும் பேசினர்கள். V. S. S. மணி.

○ ○ ○

மணப்பாரையில் அரிசிக்கஷ்டம்.

குளித்தலை தாலுகா காங்கிரஸ் கமிட்டித்தலைவரும், மணப்பாரை பஞ்சாயத்து போர்டு உபதலைவருமாகிய M. அஹமத் ஷரீப் சாயபு கீழ்வருமாறு எழுதுகிறார். கடந்த 2, 3, வாரங்களாக மணப்பாரையில் அரிசி ரூ. 1-க்கு 1-⅜ படிவீதம் ஏழை ஜனங்களுக்கு கிடைத்துவந்தது தற்சமயம் ரூ 1-க்கு ஒரு படி வீதம் கிடைப்பது கஷ்டமாக இருக்கின்றது. சில பெரிய வியாபாரிகள் ஏராளமாக கொள்முதல் செய்து அடுத்த ஜில்லாக்களுக்கு லாரியில் இரவோடு இரவாக கடத்திவிடுகிறார்கள். ஆகவே சர்க்கார் உடனடியாக கவனித்து, அடுத்த ஜில்லாக்களுக்கு போவதை தடுக்க தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டுமாய் கோருகிறேன்.

○ ○ ○

பொம்மனூர்புரம்.

(காந்தீய வழி சிறுவர் கல்லூரி.)

புதுக்கோட்டையைச் சேர்ந்த பொம்மனூர்புரம் காந்தீய வழி சிறுவர் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு 14—4—48-ல் அரிமளம் ஸ்ரீமதி செல்லம்மாள் நூல் நூற்புப்பயிற்சி அளித்தார். தினமும் பயிற்சியளிக்க அன்னர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அன்னருக்கும், ராட்டைகள் தக்ளிகள் அன்பளிப்பு அளித்தவர்களுக்கும், கட்டிட நிதிக்கு பொருளுதவி செய்த அன்பர்களுக்கும், நன்றி செலுத்துவதுடன் கல்லூரியின் வளர்ச்சியில் ஒத்துழைக்கும்படியாக அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

முத்து சுப்பையா,
நிர்வாகி.

ஜண்டா ஊன்சா ரஹே ஹமாரா !

கான்பூரைச் சேர்ந்த 56 வயதுள்ள காங்கிரஸ் தொண்டன் ஸ்ரீ சியாம்லால் பாரீஷத் பிரசித்திபெற்ற மேற்படி தேசீய கீதம் இயற்றியதற்காக மாதம் 50 ரூபாய் ஐக்கிய மாகாண சர்க்கார் அவருக்கு பென்ஷன் அளிக்கத் தீர்மானித்திருக்கிறது. 1920—21-ல் காங்கிரஸ் போராட்ட காலத்தில் சியாம்லால் இந்த கீதத்தை எழுதினர். முதன்முதலாக கான்பூர் பூங்காவில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் இந்த கீதம் பாடப்பட்டது. அந்த கூட்டத்தில் 30 வயது வாலிபனாக இருந்த பண்டிட் ஜவஹர்லால் நேருவும் பிரசன்னமாயிருந்தார்.

முஸ்லிம் அல்லாதாருடன் நேர்மையாக நடவுங்கள்.

ராஜா ஹஸன்பர் அலிக்கு வேண்டுகோள்.

டில்லி, 10—4—48

காந்திஜி அமைதிக்கமிட்டி கன்வீனர் மௌலானா முகம்மது சயீத் சாகிப் பாகிஸ்தான் அகதி இலாகா மந்திரி ராஜா ஹஸன்பர் அலிக்கு கீழ்வரும் தந்தி அனுப்பியுள்ளார்.

முஸ்லிமல்லாத அகதிகளைக் குறித்து நீங்கள் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை எல்லா வர்க்கத்தினராலும் பாராட்டப்படுகிறது, அந்த அறிக்கைக்குப் பிறகு நீங்கள் அடுத்தபடியாக எடுக்கப்போகும் நடவடிக்கை எதுவாக இருக்குமென்பதை நாம் எதிர்பார்த்திருக்கின்றோம். முஸ்லிமல்லாத அகதிகளை நீங்கள் அந்தரங்கசுத்தியுடன் அழைப்பதற்கு அறிகுறியாக சர்க்கார் பதவிகளிலும் உத்தியோகங்களிலும் அவர்கள் பங்கு கொள்வதற்கான சந்தர்ப்பம் விசாலமான மனப்பான்மையுடன் அளியுங்கள். நியாயமான முறையில் நற்காரியத்தைச் செய்ய முன்வரும்போது கிழக்கு பஞ்சாபை நீங்கள் நோக்காமல் இருக்கவேண்டுமென உங்களை வேண்டுகிறோம். மகாத்மா காந்திஜியின் உபதேசங்களை கிழக்கு பஞ்சாப் உதாசீனம் செய்துவிடும் பட்சத்தில் நீங்களும் நியாயம் நேர்மையின் சீரிய வழியை விட்டுவிட வேண்டுமென்பது அவசியமல்ல. நேர்மையுமல்ல.

பாகிஸ்தானில்

பெண்கள் சுதந்திரம்.

பர்தா சட்டத்தை மீறுவேன்.

—[பேகம் லியாகத் அலிகான்]—

பர்தாவை சட்டபூர்வமாகக்கொண்டுவர மேற்கு பஞ்சாப் சட்டசபையில் பேசப்பட்டதை கண்டிக்க மேற்கு பஞ்சாப் பெண்கள் முஸ்லிம் லீக் ஆதரவில் அனேக பெண் ஸ்தாபனங்கள் அடங்கியகூட்டம் பேகம லியாகத் அலிகான் தலைமையில் நடந்தது. "பாகிஸ்தான் ஏற்படுத்துவதிலும். பலப்படுத்துவதிலும் ஆண்களுக்கு சரி சமமாக பெண்களும் சேவை செய்திருக்கின்றனர். தங்கள் தாய்நாட்டில் சுதந்திரமாக உலாவவும், நடமாடவும் பெண்களுக்கு உரிமை உண்டு. பர்தாவைப்பற்றி தம்பட்டம் அடிப்பவர்களுக்கே இஸ்லாமிய வாழ்க்கை முறை இன்னதென்று தெரியாது. பர்தா சட்டமாக்கப்பட்டால் அதை எதிர்த்து முதன் முதலாக நானே சட்டத்தை மீறுவேன். ஆண்கள் தங்களுடைய போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் பெண்கள் நேரடி நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டார்கள்." என்று பேகம் லியாகத் அலிகான் பேசினர்.

பஞ்சாப் சட்டசபை அங்கத்தினர்களும், மற்றவர்களும் பெண்களுக்கு எதிராகவும், குறிப்பாக பர்தா முறையை வற்புறுத்தியும் பேசியதை பெண்களுக்கு எதிராக நடக்கும் கட்டுப்பாடான பிரசாரம் என்று கண்டித்ததுடன் கூட்டம் வெறுப்பையும் தெரிவித்தது.

பர்தாவின் பெயரால் பெண்களை அடக்கியாள பிற்போக்கு வாதிகள் முயற்சிக்கின்றனரென்றும், சமுதாய நிர்மாண வேலையில் முனைந்திருக்கும் பெண்களின் பிரஜா உரிமை தனிப்பட்ட சுதந்திரத்தில் ஆண்கள் தலையிட்டை எவ்விதத்திலும் சகிக்கப்போவதில்லை என்றும் காரசாரமாக பேசப்பட்டது.

ஆண்களுக்கு சமமாக பெண்களுக்கும் உரிமைகள் இருக்கவேண்டுமென்றும், பெண் உரிமைகளை காக்கும்படி சர்க்காரையும் முஸ்லிம் லீக்கையும் கேட்டுக்கொள்ளப்பட்டது. பெண் உரிமைகளைக் குறித்து ரிப்போர்ட் தயாரிக்க பெண் லீடர்களின் மகாநாடு கூட்ட மிஸ் பாத்திமா ஜின்னாவும், பேகம் லியாகத் அலிகானும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

சுய நல பிற்போக்கு வழிகளால் பெண்களுக்கு எதிராக நடந்துவரும் பிரசாரத்தை முறியடித்து, உரிமைகளைப்பெற பெண்களின் முன்னணி அமைப்பதில் எல்லாபெண்களும் ஒத்துழைக்கும்படி முடிவில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.—

இன்று பேகம் லியாகத் அலியை "மக்ரிபி பாகிஸ்தான்," "எஹ்ஸான்," 'தாகத்" "ஆகாஸ்" முதலிய பாகிஸ்தான் பத்திரிகைகள் கண்டிக்கின்றன. முஸ்லிம் ஆண்கள் மிஸ்டர் ஜின்னாவை பின்பற்றும் போது முஸ்லிம் பெண்கள் மிஸ் பாத்திமா ஜின்னாவைப் பின்பற்றுவதில் தவறு ஒன்றுமில்லை- பாகிஸ்தான் தெருக்களில் முஸ்லிம் பெண்கள் நடமாடுவதால் மனவேதனை அடையக்கூடிய ஆண்கள் வீடுகளைவிட்டு வெளியில் வாராமல் இருந்துவிடலாம். அதை பேகம் லியாகத் அலிகான் ஆட்சேபிக்கப் போவதில்லை. அதற்காக நேரடி நடவடிக்கை வரை நிலைமையை முற்றவிடுவது புத்திசாலித்தனமல்ல. பாகிஸ்தான் லீடர்கள் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளாவிட்டால் பாகிஸ்தானுக்குள் ஒரு நாசிஸ்தான் ஏற்பட்டுவிடுமென எச்சரிக்கின்றோம். என்னே! இஸ்லாமிய ஆட்சியின் அலங்கோலம்.

உங்கள் வியாபாரம் விருத்தியடைய

ஆஸாதில்

விளம்பரம் செய்யுங்கள்.

பாகிஸ்தானும், கூட்டுப் பாதுகாப்பும்!

லாகூரிலிருந்து வெளி வரும் ஒரு பத்திரிகை, இந்தியா பாகிஸ்தான் கூட்டு பாதுகாப்பின் அவசியத்தை வற்புறுத்துகையில், "பாகிஸ்தான் சமரஸத்திற்கு முன் வந்தும் இந்தியா அதை தட்டிக்கழிக்கின்றது. மிஸ்டர் ஜின்னா கூட்டுப் பாதுகாப்பு யோஜனை வெளியிட்டார் பண்டிட் ஜவஹர்லால் நேரு அதை வரவேற்றாராயினும், பாகிஸ்தானுக்கு அதிகார பூர்வமாக பதில் அளிக்கவில்லை," என்று குறை கூறுகின்றது.

அந்தரங்க சுத்தியுடன் கூறப்பட்ட குறையாக இருந்தால் பாகிஸ்தான் பத்திரிகை விஷயத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் என்ற ஹோதாவில் மிஸ்டர் ஜின்னா முறைப்படி கூட்டு பாதுகாப்பு யோஜனை இந்திய சர்க்காரிடம் சமர்ப்பிக்கவில்லை. அந்நிய நாட்டு நிருபர் ஒருவருடைய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் தான் மிஸ்டர் ஜின்னா கூட்டு பாதுகாப்பு பற்றி பிரஸ்தாபித்தார். இந்திய பார்லிமெண்டில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் பண்டித நேருவும் அந்த யோஜனையை வரவேற்றார். அவ்வித யோஜனை பொருத்தமற்றது என்று பண்டித நேரு ஒருக்கால் சொல்லியிருந்தாலாவது குறை கூற நியாயமுண்டு. அதற்கு மாறாக பண்டித நேரு அதை வாவேற்றிருக்கிறார். தவிர மிஸ்டர் ஜின்னா முறைப்படி யோஜனை சமர்ப்பிக்கவுமில்லை. இந்நிலையில் பண்டித நேருவின் அதிகாரபூர்வமான பதில் என்ற பிரச்னையே யெழவில்லை.

இதுவரை பாகிஸ்தான் நல்லெண்ணத்திற்கு அறிகுறியாக ஒன்றும் செய்யவில்லை. பாகிஸ்தான் ஏற்பட்டதும் பல்லாயிரக்கணக்கான நிரபராதிகள் கொல்லப்பட்டனர். லட்சக்கணக்கான மக்கள் வீடிழந்தனர். பாகிஸ்தான் லீடர்கள் கலகக்காரர்களுக்கு உற்சாகமளித்து வந்தனர். இன்றைக்கும் அளித்தே வருகின்றனர். சிறுபான்மையோர் வெளியேறும் வகையில் நிர்பந்திக்கப்படுகின்றனர். காஷ்மீர் இந்திய யூனியனில் சேர்ந்துவிட்ட பிறகும் அதைத் தாக்கும் கொள்ளைக் கூட்டத்தினருக்கு பாகிஸ்தான் உதவி கிடைத்தே வருகின்றது. இந்தியா எதிரி என்று பாகிஸ்தானில் பிரசாரம் நடந்து கொண்டிருக்கிறது. உள் நாட்டுக் குழப்பங்கள் சமாளிக்க முடியாமல் போகும்போதெல்லாம் மிஸ்டர் ஜின்னாவைப் போன்ற பொருப்பு வாய்ந்தவர்களும் கூட இந்தியாவுக்கு எதிராக கேவலமான பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். இரவு பகல் 24 மணி நேரமும் அவர்களை இந்திய திகில் வாட்டி வருகின்றது இந்திய எதிர்ப்பு பிரசாரத்தைத் தவிர பாகிஸ்தான் பத்திரிகைகளில் வேறெதுவும் காணவில்லை. பாகிஸ்தான் பத்திரிகாசிரியர்களும், கவிகளும் டில்லிமீது படையெடுக்க மக்களை தூண்டுகின்றனர். எடுத்ததற்கெல்லாம் இஸ்லாமிய புனித போராட்டம் பேசப்படுகிறது. இந்தியா இந்த உருட்டல்களைக் கண்டுபயப்படபோவதில்லை என்பது வாஸ்தவமே. ஆயினும் லீடர்கள் பாகிஸ்தான் எழை பொது மக்களை தவறான வழியில் இழுத்துச் சென்று சூழ் நிலையை விஷமயமாக்கிக் கொண்டிருக்கையில் பாகிஸ்தான் பாதுகாக்கப்பட கூட்டுப் பாதுகாப்பு யோஜனைக்காக இந்தியா ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும். கூட்டுப் பாதுகாப்பு இந்தியாவைக் காட்டிலும் பாகிஸ்தானுக்கே அத்யாவசியம்.

லீடர்களின் தவறான போக்கால் பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை சமாளிக்கவும் மலை ஜாதியினரை தன்னை கட்டுவதற்கும் கூட பாகிஸ்தானிடம் பொருளாதார வசதியில்லை. ஒருபுறம் சாம்ராஜ்ய ஏஜெண்டுகள் மலை ஜாதியினரை தூண்டுகின்றனர். அதை சமாளிக்க பாகிஸ்தான் லீடர்கள் அவர்களை காஷ்மீர் மீது திருப்பிவிட்டனர். இன்று மலை ஜாதியினர் பாகிஸ்தானுக்கே பெருந் தொல்லையாகிவிட்டனர். இந்நிலையில் மலைஜாதியினரை ஒடுக்குவதிலும் அல்லது பென்ஷன் என்ற பெயரால் லஞ்சம் கொடுத்து அவர்களை தன்னைகட்டுவதிலும் இந்தியா தங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென பாகிஸ்தான் லீடர்கள் விரும்புகின்றனர்.

இன்னொருபுறம் அந்நியநாட்டு படையெடுப்பின் அபாயம் ரஷ்ய அமெரிக்க போர்மூண்டால் அமெரிக்காவும் பிரிட்டனும் பாகிஸ்தானை யுத்த தளமாக உபயோகிக்கும் அந்நிலையில் ரஷ்யா பாகிஸ்தான் மீது படையெடுக்கும் இந்தியா பாகிஸ்தானுடன் சேர்ந்து ரஷ்யாவை எதிர்க்க வேண்டுமென்றும் பாகிஸ்தான் லீடர்கள் விரும்புவதாகத் தெரிகிறது. இந்தியாவின் நிலைமை முற்றிலும் வேறு வல்லரசுகளின் யுத்தத்தில் நாம் நடுநிலைமை வகிக்கவே விரும்புகிறோம். அந்நியர்களால் மூட்டப்பட்ட அக்னியில் பிரவேசிக்க நம்முடைய நலன்கள் நம்மை அனுமதிக்கவில்லை. மூன்றாவது மகாயுத்தத்தில் உடனடியாக எவ்வித அபாயமும் இந்தியாவுக்கு இல்லை என்றே சொல்லவேண்டும். ஒருக்கால் படையெடுப்பு

லீக் கோழைகள் வெளியேறட்டும்.

———o———

பத்து கோடி முஸ்லிம்களின் மதம், கலாசாரம், நாகரீகம், பாஷை பாதுகாக்கப்படவும் அரசியல் உரிமைகள் பறிக்கப்படாமலிருக்கவும் பாகிஸ்தான் ஒன்றே சிறந்த வழியென்றும் தங்களுக்கு ஓட்டு கொடுத்தால் தாங்கள் பாகிஸ்தானை ஸ்தாபிக்கப்போவதாகவும் அதன் பிறகு முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியுமென்றும் சொல்லி லீக் அபேட்சகர்கள் தேர்தல்களில் ஓட்டுக்களைப் பெற்றனர். ஆகஸ்ட் 15-ல் இந்தியா பிரிந்தது அதையடுத்து கிழக்கு பஞ்சாப், யு. பி, டில்லி, ஆஜ்மீர், மேற்கு வங்கம், சென்னை, பம்பாய், ஸி. பி, ஒரிஸ்ஸா மாகாண முஸ்லிம்கள் அடைந்த துர்கதி இங்கு விவரிக்க வேண்டிய அவசியமில்லை மேற்கூறிய மாகாணங்களிலுள்ள ஐந்து கோடி முஸ்லிம்களின் உலகமே இருண்டது. திடீரென்று அவர்களுடைய உயிர், உடைமை, மானம் எல்லாவற்றிற்கும் அபாயம் ஏற்பட்டு விட்டது. அதை அடுத்து அடித்த அழிவுச் சண்டமாருதத்தால் செடிகள் ஒருபுற மிருக்க வானளாவிய விருட்சங்களும் சாய்ந்தன. அகங்கார முறுக்கேறி வளையாமலிருந்த பிடரிகளும் குனிந்தன. உல்லாசமாக மாளிகைகளில் வசித்தவர்களுக்கு ஒண்ட குடிசைகளும் இல்லாமல் போய்விட்டது. பட்டுப் பீதாம்பரங்களில் காட்சி அளித்தவர்கள் கந்தைகளின்றி தவித்தனர். நவரத்தினங்களை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தவர்கள் கஞ்சியின்றி பரதவிக்கலாயினர். எல்லாவற்றையும் பறிகொடுத்து சுற்றத்தார்களையும் இழந்து உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள பாகிஸ்தானுக்கு ஓடியவர்களுக்கு அங்கும் ஒண்ட இடமில்லாமல் போய்விட்டது. அண்டை அயலாரை பகைத்துக் கொண்டு, மூதாதையரின் நாட்டை அந்நிய நாடென எண்ணி, மதிகெட்டு, வாங்கிய பாகிஸ்தானும் முடிவில் நரகமாகப் போய்விட்டது. குனிந்த தலையுடன் பாகிஸ்தானிலிருந்து திரும்பி வந்திருக்கும் முஸ்லிம்கள் பாகிஸ்தானில் நேரில் கண்டவைகளை, அநுபவித்தவைகளை சொல்லவும் வெட்கப் படுகின்றனர்.

எது எப்படியிருப்பினும் நடந்தேறிய விஷயங்கள் யாருக்கும் தெரியாமலில்லை. தலை சிறந்த சில லீக்

நடந்தாலும் முதலில் பாகிஸ்தானே தாக்கப்படும். ஆகையால் தன்னுடைய நிலைமையை குறித்து பாகிஸ்தானே கவலைகொள்ளவேண்டும். இருப்பினும் பாகிஸ்தான் கவர்னர் ஜெனராலும் அவருடைய சிஷ்யர்களும் தங்களுடைய நாட்டை வேண்டுமென்று யுத்தத்தில் ஈடுபடுத்துவதில்லையென உறுதியளித்தால் இந்தியா கூட்டுப்பாதுகாப்பு உடன்படிக்கைசெய்து கொள்ளத் தயாராக இருக்கமுடியும். ஆனால் பாகிஸ்தான் லீடர்கள் நாட்டில் ஏற்படுத்தியிருக்கும் நிலைமையில் யுத்தத்திலிருந்து பாகிஸ்தான் விலகியிருப்பது சாத்தியமில்லை பாகிஸ்தானின் எல்லா உயர்தர ராணுவ அதிகாரிகளும் அந்நிய நாட்டினராகவே இருக்கின்றனர். கிட்டத்தட்ட எல்லா கவர்னர்களும் பொலிடிகல் ஏஜெண்டுகளும் ஆங்கிலேயர்கள் தான். அமெரிக்க இஞ்ஜினியர்கள் பாகிஸ்தானில் விமான தளங்கள் அமைத்துவருகின்றனர். அவர்களுக்கு வர்த்தக சலுகைகள் அளிக்கப்படுகின்றன. யுத்தகாலத்தில் இங்கிலாந்தை காப்பாற்றுவதற்கென ஈரான், பாகிஸ்தான் அரங்கங்களில் ரஷ்யாவின் கவனத்தை இழுக்காமல் அவர்கள் சும்மா இருக்கப் போவதில்லை. நிலைமை இவ்வாறு இருக்க இந்தியா மற்றவர்களின் யுத்தத்தீயில் குதிக்க முடியாது. எல்லாவற்றையும் விட முக்கியமானது காஷ்மீர் பிரச்னை. காஷ்மீர் மீது படையெடுப்பை நடத்தி, பாகிஸ்தான், இந்திய உதவியை இழந்துவிட்டது. காஷ்மீர்மீது படையெடுப்பு நடத்தாமலிருந்தால் இந்திய எல்லை ரஷ்ய எல்லையை தொட்டுக்கொண்டிருக்கும். அந்நிலையில் ரஷ்ய படையெடுப்பிலிருந்து பாகிஸ்தானை பாதுகாக்கும் பொருப்பு இந்தியாவுக்கு இருந்திருக்கும். எதுவரை காஷ்மீர் பிரச்னை தீராமலிருக்குமோ அதுவரை இந்தியா பாகிஸ்தான் கூட்டுப் பாதுகாப்புக்கு வழி பிறக்கமுடியாது.

ஆயினும் வெளிப்படையாக காணப்படும் அளவுக்கு நிலைமை அவ்வளவு அவநம்பிக்கை அளிக்கக் கூடியதாய் இல்லை. அவசியத்தையொட்டி வழிகள் பிறக்கலாம். இந்தியா பாகிஸ்தானுக்கு இடையே விமான சர்வீஸ் ஒப்பந்தம் ஏற்பட்டதும் பாகிஸ்தான் பருத்திக்கு பதிலாக இந்தியா துணி கொடுக்க வேண்டுமென ஏற்பட்ட ஒப்பந்தமும் அவசியத்தை ஒட்டியேயாகும். அந்தரங்க சுத்தியுடன் கூட்டுப் பாதுகாப்பை பாகிஸ்தான் விரும்பினால் அவ்வித ஒப்பந்தம் ஏற்படுவதும் சாத்தியமே. ஆனால் இந்தியா எதிரியென்று பாகிஸ்தானில் நடத்தப்படும் பிரசாரம் நிறுத்தப்படவேண்டும். காஷ்மீர் படையெடுப்பாளருக்கு பாகிஸ்தான் செய்துவரும் உதவி கைவிடப்பட வேண்டும் காஷ்மீர் பிரச்னை சுமுகமாக தீர்க்கப் படாதவரையில் இந்தியா, பாகிஸ்தான் கூட்டுப்பாதுகாப்பு என்ற பேச்சுக்கு இடமில்லை.

———

லீடர்கள் ஓடி மறைந்தனர். சிலர் பெருமூச்சு விட்டு அடங்கிவிட்டனர். சிலர் வீடுகளுக்குள் பதுங்கிக் கொண்டனர். இன்னும் சிலர் கண்களை அகல விரித்து நடப்பதைப் பார்த்து நடுங்குகின்றனர். ஆயினும் என் புருஷனுக்கு அரண்மனை உத்தியோகம் என்ற பழமொழியைப் போல சிலர் சட்டசபைகளில் போய்க்கொண்டுதானிருக்கின்றனர். இந்திய பார்லிமெண்டின் பட்ஜெட் கூட்டம் நடந்தும் முடிந்தது. பட்ஜெட் பொருத்தவரை இந்திய முஸல்மான்களின் நோக்கம் என்னவென்பதையும் அவர்களுடைய குறைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டிய பல சந்தர்ப்பங்கள் இருக்கத்தான் செய்தன. முஸ்லிம்களின் ஓட்டுக்களைப் பெற்று முஸ்லிம்களின் பிரதிநிதிகளாக பார்லிமெண்டில் உட்கார்ந்துகொண்டிருந்த லீக் லீடர்கள் முஸ்லிம்களின் குறைகளை எடுத்துச் சொல்லியிருக்க வேண்டியது கடமை. பிரதிநிதித்வ கடமைகளை நிறைவேற்றியிருக்க வேண்டியது அவர்களுடைய பொருப்பு. ஆனல் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. பார்லிமெண்ட் ஆசனங்களிலே தூங்கி விழுந்துகொண்டிருந்தனர். எழுந்து பேச அவர்களுக்கு தைரியமில்லாமல் போய்விட்டது. யாரோ ஒரு சிலர் எழுந்து பேசத் துணிந்தபோது வகுப்புவாதக் குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற காரணத்தால் வாயடைக்கப்பட்டார்கள். மறு வார்த்தையின்றி சாக்கடையில் புரண்டு எழுந்த பூனை போல் வாலை மடக்கிக் கொண்டு பேசாமல் இருந்தும் விட்டனர்.

சேவை செய்வதற்கு தைரியம் தேவை. கோழைகளால் சேவை செய்யமுடியாது. தைரியம் நேர்மையிலிருந்துதான் பிறக்க முடியும். குற்றமுள்ள நெஞ்சில் தைரியம் இடம் பெற முடியாது. லீக் மெம்பர்களுக்கு தைரியம் இருந்திருந்தால் பார்லிமெண்டில் தக்க பதில் கொடுத்திருப்பார்கள். ஆனல் குற்றமுள்ள நெஞ்சுள்ளவர்களுக்கு தைரியம் எங்கிருந்து வரும்? சேவைக்காக முன்வந்தவர்கள் எதற்கும் துணிந்தவர்களாக இருக்க வேண்டிய தவசியம். அவ்வழியில் மலர்கள் மட்டுமின்றி முட்களையும் ஏற்க சித்தமாயிருக்க வேண்டும். ஆனல் லீகர்களுக்கு தைரியமில்லை. இந் நிலையில் பதவிகளை விட்டு விலகுவது ஒன்றுதான் யோக்கியப் பொருப்புள்ள காரியம் உண்மையாகவே முஸ்லிம்களின் பிரதிநிதிகளாயிருந்து கடமைகளை நிறைவேற்றக் கூடியவர்களுக்கு இடமளிக்க வேண்டியதுதான் கண்ணியமான செய்கையாகும். லீகர்கள்சட்டசபை பதவிகளை ராஜினமா செய்து வெளியேறி தேசிய முஸ்லிம்களுக்கு இடமளிப்பதுதான் சரி. அவர்கள் தயங்காமல் எதையும் எடுத்துச் சொல்ல முடியும். தேசிய சகோதரர்களுடன் சேர்ந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடி தியாகங்கள் செய்திருக்கும் அவர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகித்து முஸ்லிம் சமூகத்துக்கு சேவை செய்வது சாத்தியம்.

எனவே இந்திய முஸல்மான்கள் மத்தியிலும், மாகாணங்களிலும் இருக்கும் லீக் மெம்பர்கள் வெளியேறும்படி செய்ய வேண்டும். குறிப்பாக சென்னை, பம்பாய், ஒரிஸா, ஸி பி., மேற்கு வங்க மாகாணங்களில் உள்ள முஸ்லிம்கள் லீக் சட்டசபை மெம்பர்களை வெளியேறும்படி கோர வேண்டும். இந்த மாகாண சர்க்கார்களில் முஸ்லிம் மந்திரி யாருமில்லை. காங்கிரஸ் முஸ்லிம்கள் உள்ளே வந்தால் மந்திரி சபைகளிலும் சேர்க்கப் படலாம். அடுத்த பார்லிமெண்ட் கூட்டத்தில் சுதந்திர இந்திய அரசியல் திட்டம் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது. இச் சமயத்தில் முஸ்லிம்களின் உண்மையான பிரதிநிதிகள் உள்ளே இருக்க வேண்டியதவசியம். அவர்கள் காங்கிரஸ் முஸ்லிம்களாகத்தான் இருக்க முடியும். செல்லாக் காசுகளை வெளியேற்ற முஸ்லிம்கள் அனைவரும் சேர்ந்து உடனடியாக கிளர்ச்சி ஆரம்பிக்கவேண்டும் நிலைமையை முற்ற விடாமல் லீக் மெம்பர்கள் சட்டசபை பதவிகளை ராஜினமா செய்து கண்ணியமாய் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது.

மிஸ்டர் ஜின்னவுக்கு சொந்த விமானம்

மிஸ்டர் ஜின்னவின் சொந்த உபயோகத்திற்காக "ராயல் வாக்கிங்" என்ற ஆகாயவிமானம் மே மாத ஆரம்பத்தில் கராச்சி வந்து சேருமெனத் தெரிகிறது. இந்த விமான தயாரிப்பு வெகு சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும். இதுவரையில் இந்த ரகத்தைச் சேர்ந்த 6 விமானங்களே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் நான்கு விமானங்கள் ஆருவது ஜார்ஜ் மன்னருக்கும், ஐந்தாவது விமானம் அர்ஜண்டைன பிரஸிடெண்டுக்குமாக தயாரிக்கப்பட்டன. நீண்ட பிரயாணத்திற்கென்று பிரத்யேக முறையில் இது அமைக்கப்பட்டுள்ளது. படுக்கை வசதிகளுடன் உபரி பெட்ரோல் பங்குகளும் அதில் அமைக்கப்படும். கராச்சியிலிருந்து ஒரேயடியாக டாக்கா போய் சேருவதற்காகவே இந்த ஏற்பாடுகள். சாதாரணமாக மணி ஒன்றுக்கு 245 மைலும், அதிக பட்சமாக 290 மைல் வேகத்திலும் இந்த விமானம் பறக்கும்.

—(குளோப்)

பாகிஸ்தானை விட்டு வைப்பார்களா?

அறிவிழந்து, ஒழுக்கத்தின் கட்டுப்பாடுகளையும் மீறி, இஸ்லாம், முஸ்லிம்கள் என்று கூப்பாடு போட்டு பாகிஸ்தான் ஏற்படுத்த லீகர்கள் முயற்சித்ததற்கு அபாய காலத்தில் அங்கு குடியேறி நிம்மதியாக வாழ முடியுமென்று நம்பியிருந்தது ஒன்றே காரணம். பாகிஸ்தானும் ஏற்பட்டது. இந்திய முஸல்மான்கள் மீது துன்ப மலைகளும் சரிந்தன. ஆயினும் பாகிஸ்தான் எவ்விதத்திலும் உதவ முடியவில்லை. நடந்தேறிய சம்பவங்களுக்குப் பிறகு பாகிஸ்தான் இந்திய முஸல்மான்களுக்கு எவ்விதத்திலும் உதவ முடியாதென்பது நிரூபணமாகிவிட்டது. இந்திய லீகர்கள் வாங்கிக்கொடுத்த பாகிஸ்தானில் அவர்களுக்கே இடமில்லாமல் போய்விட்டது. நவாப் ஜாதாகதவடைத்துவிட்டார்.

அது மட்டுமா! பாகிஸ்தானிகள் ஹிந்து, சீக்கியர்களைத் துன்புறுத்தி வெளியேறும்படி செய்து இந்திய முஸ்லிம்களின் தலைக்கு ஆபத்து உண்டாக்கி விட்டனர். அதனால் இந்திய முஸல்மான்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுடைய உயிர், உடைமை, மானம் பறிபோக நேர்ந்தது. என்றுமே கடவுளை எண்ணிப் பார்க்காதவர்கள்கூட கஷ்ட காலத்தில் கடவுளை நினைக்க ஆரம்பித்துவிட்டனர்.

முஸ்லிம் அனாதைகள் பெயரால் ஏற்படுத்தப்பட்ட, பாகிஸ்தான் அனாதை விடுதியை நோக்கி, உண்மையாகவே இந்தியாவில் அனாதைகளாக்கப் பட்ட அனாதை முஸ்லிம்கள் ஓட ஆரம்பித்தனர். தாங்கள் ஏற்படுத்திய பூலோக சொர்க்கத்தில் நிம்மதியாக வாழமுடியும் என்று எண்ணி லட்சக் கணக்கானவர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறிச் செல்லலாயினர்.

முஸ்லிம்களைத் துர்க்கதிக்குள்ளாகிவிட்டு அதைத் தங்களுக்கு சாதகமாய் பிரயோசனப் படுத்திக் கொள்ளும் பழைய வழக்கத்தை ஒட்டி லீகர்கள் பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். "பாகிஸ்தான் ஏற்படாமல் இருந்திருந்தால், முஸ்லிம்களுக்கு புகலிடம் இல்லாமல் போயிருக்கும். நாடு பிரிக்கப்படாமல் கலவரங்கள் நடந்திருந்தால், முஸ்லிம்கள் ஓடி தஞ்சம் புக இடமில்லாமல் போயிருக்கும். அவர்கள் அறவே அழிந்து போயிருப்பர்" என்று லீகர்களின் பிரசாரம் ஆரம்பமாயிற்று. தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்து வந்த தாய் நாட்டை விட்டு ஓடி வந்தவர்களுக்கு "முஹாஜிரீன்" என்று பெயரிடப்பட்டது. ஆயினும் சில லக்ஷம் முஸ்லிம்களுக்குக்கூட இடவசதி செய்து கொடுக்க அவர்களால் முடியாமலே போய்விட்டது. ஆயினும் இந்தியாவின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவி வாழும் நாலரைக் கோடி முஸ்லிம்களுக்கு பாகிஸ்தானில் இடவசதி செய்துகொடுக்க எங்ஙனம் முடியுமென்று அந்த அறிவிலிகள் எண்ணிப் பார்க்கவில்லை. பாகிஸ்தான் பூமி ரப்பர் அல்ல அவசியமானல் இழுத்து விஸ்தரித்துக்கொண்டு குடியேறுபவர்கள் அனைவருக்கும் இடமளித்துவிட முடியாது. உண்மையில் லீகர்களுக்கு அவ்வளவு அறிவு இருந்திருந்தால் பாகிஸ்தானை ஏற்படுத்தி தங்களுடைய அறிவீனத்தை உலகுக்கு அறிவித்திருக்கமாட்டார்கள் அல்லவா!

எல்லாம் வெட்டவெளிச்சமாக அதிக நாட்கள் பிடிக்கவில்லை. பாகிஸ்தான் புனிதபூமியில் குடியேறிய சில லட்சம் முஸ்லிம்களும் நூற்றுக்கணக்கான துன்பங்கள், கஷ்ட நஷ்டங்களை சகித்து இழிவு, கேவலத்துக்குள்ளாகி பாகிஸ்தான் சொர்க்கத்தை விட்டு மீண்டும் இந்திய நரகத்திற்கே ஓடிவந்து கொண்டிருக்கின்றனர். ஹிஜரத்தின் புனித போர்வையை போர்த்தி பாகிஸ்தானுக்குள் பிரவேசித்தவர்கள் இன்று அதைக்கிழித்தெறிந்துவிட்டு திரும்பி வருவது பாகிஸ்தான் வெட்கப்படத் தகுந்த விஷயமாகும். அதுமட்டுமின்றி இந்திய மண்ணில் காலடி வைத்த மாத்திரத்திலே பாகிஸ்தானில் நடக்கும் அட்டூழியங்களை அவர்கள் அம்பலப்படுத்தி வருகின்றனர். இவ்வித நிலைமையைப் பார்த்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைவர் சவுத்ரி கலி குஸ்ஸமான் அடைந்துள்ள மனக்கஷ்டத்தை கீழ்வருமாறு 'டைம்ஸ் ஆப் இந்தியா' நிருபர் அறிவிக்கின்றார்.

"முஹாஜிரீன்கள் திரும்பிச்செல்வது உடனடியாக நிற்கவேண்டுமென்று சவுத்ரி சாகிப் மிஸ்டர் லியாகத் அலிகானைக் கேட்டுக்கொண்டார். இல்லையேல் இந்திய யூனியன் முஸல்மான்களுக்கு பாகிஸ்தான் மீது அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும், முஹாஜிரீன்கள் திரும்பிப்போவதால் அவர்களைப் பார்த்து இந்திய முஸல்மான்களின் உற்சாகம் குன்றிப் போவதுமட்டுமின்றி அவர்கள் இந்தியா, பாகிஸ்தானை மீண்டும் ஐக்கியப்படுத்த போராட்டம் ஆரம்பித்துவிடுவர். தங்களுடைய தியாகத்தினுல் பாகிஸ்தானை ஏற்படுத்திய முஸ்லிம்கள் கஷ்ட காலத்தில் பாகிஸ்தானில் அடைக்கலம் புகமுடியும் என்று நம்பியிருந்தனர். ஆயினும் இங்கு வந்த பிறகு அவர்களுக்கு

பெரும் ஏமாற்றமே ஏற்பட்டது. விட்டுவந்த இடத்திற்கே திரும்பச் செல்வதிலேயே தங்கள் சுபிட்சம் அடங்கியிருக்கிறது என்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டனர்.”

தான் அவ்விதம் சொல்லவில்லையென்று இன்று சவுத்ரி கலி குஸ்ஸமான் மறுக்கின்றார். “டைம்ஸ் ஆப் இந்தியா” நிருபரின் சரடு என்றும் சொல்லு கின்றார். உண்மை எதுவாக இருப்பினும் பாகிஸ்தானுக்குச் சென்றவர்கள் பெருமளவில் திரும்பி வந்துகொண்டிருக்கின்றனர். அப்படி வரக்கூடியவர்கள் மனதில் பாகிஸ்தானைப் பொருத்து நல்ல அபிப்பிராயம் இருக்கமுடியுமா? இந்திய முஸல்மான்கள் பாகிஸ்தானிடம் கொண்டிருந்த நம்பிக்கை தவறு என்று நிரூபணமாகிவிடவில்லையா? பாகிஸ்தானிலிருந்து திரும்பும் முஸ்லிம்களுக்கு இந்தியா இடமளிக்கையில் பாகிஸ்தான் ஹிந்துக்களுக்கு இடமளிக்க முன்வாராததைக் குறித்து மனவேதனை இந்திய முஸல்மான்களுக்கு ஏற்படாமலிருக்க முடியுமா? முஸ்லிம்களை இந்தியாவுக்கு திருப்பி விரட்டியடிக்கும் கெட்ட பெயர் பாகிஸ்தானுக்கு ஏற்படாமலிருக்க முடியுமா? இது யாவும் உண்மையானால் சவுத்ரி கலி குஸ்ஸமான் மட்டும் அதை உணராமல் இருப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை எனவே டைம்ஸ் ஆப் இந்தியா நிருபர் சரடு கட்டிவிட்டார் என்று கலி குஸ்ஸமான் சொல்லுவதில் அர்த்தமில்லை. பாகிஸ்தானில் முஸ்லிம்களுக்கே இடம் கிடைக்கவில்லை. போனவர்கள் தினம் 5,000-க்கு மேல் திரும்பி இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கின்றனர்.

பாகிஸ்தானில் இன்று நடப்பதில் எதிர்பார்க்கப்படாத புதிய விஷயம் ஒன்றுமில்லை ஆயினும் பாகிஸ்தான் மண்ணிலே காலடி வைத்து கஷ்டங்களை சகிக்க முடியாமல் துன்ப முட்களின் உறுத்தல் பொறுக்க முடியாமல் இடறி விழுந்து, நிலை தடுமாறி, நிதானமிழந்து திரும்பி வருபவர்களைக் குறித்து வருந்தாமல் இருக்கமுடியாது.

இருப்பினும் பாகிஸ்தான் விரும்பினால் திரும்பி வரும் முஸ்லிம்களால்கூட நன்மையடைய முடியும். அந்தரங்க சுத்தியுடன் பொறுப்பை உணர்ந்து முஸ்லிம் அல்லாதாருக்காக பாகிஸ்தான் கதவு திறந்துவிட்டு வெளியேறிய ஹிந்து சீக்கியர்களை திருப்பி அழைப்பதுதான் அதற்குள்ள சிறந்த வழியாகும். இந்தியக்கதவு எல்லோருக்கும் திறந்து வைக்கப்பட்டிருக்கும்போது பாகிஸ்தான் கதவு முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதாருக்கும் மூடப்பட்டிருப்பது நியாயமல்ல. பாகிஸ்தான் தன்னுடைய நியாயத்திற்குப் புறம்பான போக்கை புனராலோசனை செய்யாவிட்டால் இந்திய முஸ்லிம்கள் காயப்பட்ட உணர்ச்சியின் தூண்டுதலை அலட்சியம் செய்துவிட்டு பாகிஸ்தானை விட்டு வைத்திருப்பார்கள் என்று நினைப்பது மடமையாகும்.

கராச்சி, 8—4—48

பாகிஸ்தான் தலைநகரில் நேற்றுபோலீஸ் படைக்கும் அகதிகளுக்கும் நடந்த கைகலப்பில் சில போலீஸ்காரர்கள் காயமடைந்தனர். 13 முஸ்லிம் அகதிகள் கைது செய்யப்பட்டனர். முஸ்லிம் அகதிகள் ஆக்ரமித்துக்கொண்டிருந்த ஒரு வீட்டை மீட்க போலீஸார் யத்தனித்ததின் பலனாக இச்சம்பவம் நடந்ததாகத்தெரிகிறது.

பாகிஸ்தான் செக்டேரியட்டிற்கு அரை மைல் தூரத்திலுள்ள பர்னஸ் ரோடில் போலீஸ் படை பொன்ற முஸ்லிம் பெண் அகதிகளை அப்புறப்படுத்த முயற்சித்தபோது பெண் அகதிகள் கூக்குரலிட்டு பிரலாபிக்க ஆரம்பித்து விட்டனர். போலீஸார் முயற்சிக்கு இடையூறாக இருந்த முஸ்லிம் ஒருவனை ஒரு போலீஸ்காரன் கையினால் குத்தியபொழுது அகஸ்மாத்தாக பக்கத்திலிருந்த பெண்ணொருத்தி போலீஸ்காரனின் முஷ்டிக்கு இலக்காகிவிட்டாள். அதனால் ஆத்திரமடைந்த பொதுஜனங்கள் போலீஸாரைத் தாக்க ஆரம்பித்தனர். போலீஸார் வெகு சிலரே இருந்ததால் அவர்களுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருந்திருக்கும். ஆயினும் ஆயுதந்தாங்கிய இரண்டு போலீஸ் லாரிகள் அதற்குள் வந்துவிட்டன. கூட்டம் கலைக்கப்பட்டது. 13 பேர் கைது செய்யப்பட்டனர். ஆயுதம் தரித்த போலீஸார் கலவரப் பிரதேசத்தைக் காவல் காக்கின்றனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு பெரும்பான்மை அகதிகள் தங்கள் எதிர்காலத்தைக் குறித்து கவலைப்பட ஆரம்பித்துவிட்டனர். அவர்களிடையே அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அநேக கூட்டங்கள் கூட்டப்பட்டு கண்டனக் கோஷங்கள் கோஷிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய சர்க்கார் தொழில் கொள்கை.

இந்திய சர்க்கார் தன்னுடைய தொழிற் கொள்கையை அறிவித்துவிட்டது. நாட்டில் துடர்ந்து நடந்த பல சம்பவங்களுக்குப் பிறகு மக்கள் இந்திய சர்க்காரின் தொழிற்கொள்கையை அறிய ஆவலுடன் இருந்தனர் நாடு விடுதலை யடைந்ததை யொட்டி பல லட்சம் மக்கள் நிலைகெட்டு அலைகின்றனர். வேலைநிறுத்தம்செய்ய எங்கும் தொழிலாளர்கள் தூண்டப்படுகின்றனர். இன்னொரு புறம் காங்கிரஸிலிருந்து விலகிய ஒரு பிரிவினரால் தொழிலாளர், பொதுமக்கள் பிரச்னைகள் தீர எதிர் கட்சியாக இருந்து பாடுபடப் போவதாக பிரசாரம் நடந்து வருகிறது இந்நிலையில் சர்க்கார் தன்னுடைய தொழில் கொள்கை இன்னதென்று அறிவிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. சரியான சந்தர்ப்பத்தில் அறிவித்தும்விட்டது.

எல்லா தொழில்களையும் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்பது சிலரின் கோரிக்கை. அதைக் குறித்து சர்க்காரின் முடிவு ஏற்கெனவே அறிவித்தாய் விட்டது. அவ்வித நடவடிக்கையில் இறங்க உகந்த நிலைமை இன்னும் ஏற்படவில்லை என்று பண்டித ஜவஹர்லால் நேரு தெளிவாக்கியுள்ளார். அதிலுள்ள உண்மையை யாரும் ஆட்சேபிக்கமுடியாது. தொழில் துறையில் நம் நாடு போதிய அளவு இன்னும் முன்னேறவில்லை. மேலும் எல்லா தொழில்களையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு தொழிற்சாலை முதலாளிகளுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதும் சாத்தியமில்லை. அப்படியே எடுத்துக்கொண்டாலும் பிறகு தேசத்தின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான இதர சாதனங்களுக்கு சர்க்காரிடம் பணம் எங்கிருந்து வரும். அதையெல்லாம் அனுசரித்தே சர்க்காரின் தொழில்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது ரயில்வே போக்குவரத்து, மின்சாரம், ஆயுத தளவாட உற்பத்தி, அணு சக்தி உற்பத்தி, கட்டுப்பாடு இவைகளை சர்க்காரே எடுத்து நடத்துமென அறிவிக்கப் பட்டிருக்கிறது.

தொழில்களை தேசிய மயமாக்குவதற்கு இது மட்டும் போதாதென்று சொல்லலாம். ஆயினும் சர்க்காரின் தொழில் கொள்கையிலுள்ள மூன்று அம்சங்கள், சர்க்காரின் இறுதி லட்சியம் என்ன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. பத்து வருஷங்களுக்குப் பிறகு நிலக்கரி, இரும்பு, எஃகு, கப்பல் கட்டும் தொழில், தந்தி, டெலிபோன், வயர்லெஸ் இவைகளின் உற்பத்தி, உலோக எண்ணைகள், பெட்ரோல் முதலிய தொழில்கள் மீது சர்க்காரின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடுவது பெருமளவு சாத்தியமே. இந்த இடைக்காலத்தில் இன்றைய ஏற்பாடு நீடித்து இருக்கும். அதாவது தனிப்பட்ட கம்பெனிகள் இத்தொழில்களை நடத்த அனுமதிக்கப்படுவதுடன் சர்க்காருக்கும் புதிய கம்பெனிகளை ஆரம்பிக்க உரிமை உண்டு. முடிவில் இந்த தொழில்கள் மீதும் சர்க்காருக்கு ஆதிக்கம் ஏற்பட்டுவிடும் என்பதுதான் அதற்கு அர்த்தம்.

உப்பு உற்பத்தி முதல் துணி, சர்க்கரை, சிமெண்ட் முதலிய தொழில்களும் அடங்கிய இதர 18 வித தொழில்கள் பிரைவேட் கம்பெனிகள் நடத்தினாலும் சர்க்காரின் மேற்பார்வையின்கீழேயே இருந்து வரும் தொழிற்சாலை முதலாளிகள் உற்பத்தியைப் பெருக்குவதில் முழு கவனத்தையும் செலவிட வேண்டியிருக்கும். அவர்கள் உற்பத்தியைப் பெருக்க ஒத்துழைக்காவிடில் சர்க்கார் தலையிட்டு தங்களுடைய கட்டுப்பாட்டின்கீழ் அந்த தொழில்களையும் எடுத்துக்கொள்ள சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க முயற்சிக்கும் எந்த ஒரு அரசாங்கமும் இவ்வித அதிகாரங்களைப் பெற்று அதை பிரயோகிப்பதும் சகஜமே. உற்பத்தியைப் பெருக்குவதே சர்க்கார் தொழில் கொள்கையின் அடிப்படை நோக்கம் என்று தொழில மந்திரி அறிவித்தது முற்றிலும் நியாயமே.

உற்பத்தியைப் பெருக்க தொழிலாளரின் ஒத்துழைப்பு மிக அவசியம். உழைப்புக்கு தகுந்த கூலி கிடைத்தாலே தொழிலாளி உற்சாகத்துடன் உழைக்கமுடியும். துரதிர்ஷ்டவசமாக கடந்த காலத்தில் தொழிற்சாலை முதலாளிகளோ, அரசாங்கமோ தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்கவில்லை. தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்படுவதற்கு உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்கள், உழைப்புக்குத் தகுந்த ஊதியம், லாபத்தில் பங்கு நிர்ணயிக்கப்படுவதில் தொழிலாளர்களுக்கும் பிரதிநிதித்வம் இருக்க வேண்டியது அவசியம். அதற்கு சோஷலிஸம் என்று சொன்னாலும் சரி. அல்லது தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு இசைவது என்று பெயர் வைத்துக்கொண்டாலும் சரி, இந்திய சர்க்கார் அதைத் தன்னுடைய தொழில் கொள்கையின் அடிப்படையாக ஏற்றுக்கொண்டுவிட்டது என்றே சொல்ல

நிஜாம் ஆட்சி இஸ்லாமுக்கே களங்கம்

ரஸ்வியின் வாய் துடுக்கு.

இந்தியா ஹைதராபாத் சர்க்கார்களுக்கிடையே ஏற்பட்டுள்ள தகராறுகளுக்கு ஹைதராபாத் முஸ்லிம்லீக் இத்திஹாதுல் முஸ்லிமின் பாஸிஸ்ட் சர்வாதிகாரியான மிஸ்டர் காஸிம் ரஸ்வியே காரணம். "முஸ்லிம்களாகிய நாம் எதற்கும் தயாராக இருக்கின்றோம். இந்திய சர்க்கார் நமக்கு எதிராக நடவடிக்கையில் இறங்கினல் நாலரைக்கோடி இந்திய முஸ்லிம்கள் சதி செய்ய ஆரம்பித்துவிடுவர். லட்சியம் கை கூடாதவரை வாள்களை உரையிடவேண்டாம்" என்று காஸிம் ரஸ்வி பொருப்பற்ற விதமாய் பிசற்றிய பொதுக்கூட்டத்தில் "டில்லி சலோ" "எதிரிகள்மீது இரக்கம்காட்டவேண்டாம்" "எல்லோரையும் பொருக்கிப் பொருக்கி தீர்த்துக்கட்டுங்கள்" என்ற கோஷங்கள் அடிக்கடி கிளம்பிக்கொண்டிருந்ததாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது.

அம்மாதிரி ரஸ்வி பேசியிருந்தால் அதை முட்டாள்தனம், மடத்தனம், வாய்கொழுப்பு என்றே சொல்லவேண்டும். இந்திய சர்க்காருக்கு இம்மாதிரி சவால் விடுத்த ரஸ்வியை விட ஹைதராபாத்துக்கும், ஹைதராபாத் நிஜாமுக்கும் மோசமான விரோதி வேறு யாரும் இருக்க முடியாது.

'டில்லி சலோ' கோஷத்தின் விளைவுகள் என்னவாயிருக்குமென்பதை வருங்காலம் முடிவு செய்யப்போகின்றது. மடத்தனமாய் பிதற்றும் வாய் கொழுத்தவர்கள் அடையப்போகும் துர்க்கதியை உலகம் பார்க்கத்தான் போகிறது.

ஆயினும் இந்திய முஸல்மான்களைப் பொருத்து முட்டாள்தனமாய் பிதற்ற காஸிம் ரஸ்விக்கு வக்காலத்து கொடுத்தவன் யார் என்று இந்திய முஸ்லிம்கள் சார்பில் கேட்காமலிருக்க முடியாது. ரஸ்வியின் பொருப்பற்ற பேச்சு ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் இந்திய முஸல்மான்களின் நிலைமையை இன்னும் மோசமாக்கி விடக்கூடும். ஹைதராபாத்தில் இருந்துகொண்டு உருவிய வாளைப்பற்றி பேசுவதும், 'டில்லி சலோ' என்று கோஷிப்பதும் சில நாள்வரை சாத்தியமாக இருக்கலாம். அதனல் அவர்கள் லீடர்களாகவும் விளங்கலாம்.

இந்திய முஸல்மான்கள் தங்கள் அரசாங்கத்தை எதிர்த்து சதி செய்யத் தயாராய் இல்லை என்றும், முஸ்லிம்கள் சதிகாரர்கள் அல்ல என்றும் அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

வேண்டும். அதாவது தொழிலாளிகள், முதலாளிகள், சர்க்கார் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக்கமிட்டிகள் தொழிலாளிகளின் உழைப்புக்குத்தகுந்த ஊதியம், நலன்கள் குறித்து முடிவு செய்யும். அத்துடன் தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருக்கு, தொழிலாளி முதலாளிகளிடையே எழும் சச்சரவுகளை தீர்த்து வைப்பதற்கும் இம்மாதிரியான கூட்டுக்கமிட்டிகளே அமைக்கப்படும். லாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுக்கப்படும். உற்பத்தி பெருக்கத்தை அனுசரித்து தொழிலாளர்களுக்கு லாபத்தில் கொடுக்கப்படும் பங்கும் அதிகரித்துக்கொண்டே போகும். இந்த முடிவை தொழிலாளர்கள் தங்களுக்கு கிடைத்திருக்கும் பெருத்த வெற்றியென்றே சொல்லமுடியும். லாபத்தில் தங்களுக்கு பங்கு கிடைக்கவில்லையென்று தொழிலாளர்கள் குறை கூறி வந்தனர். போனஸ் அளிப்பதாக ஒப்புக்கொண்ட பிறகும் முதலாளிகள் வாக்குறுதிகளை மீறுகின்றனர் என்றும் லாபத்தைக் காட்டுவதில் பொய்க்கணக்குகள் சமர்ப்பிக்கின்றனர் என்றும் தொழிலளிகள் குறைபட்டுக்கொண்டிருந்தனர். புதிய ஏற்பாட்டின்படி தொழிற்சாலை முதலாளிகள் அப்படிச் செய்யமாட்டார்கள் என்று நம்மால் சொல்லமுடியாது. ஆயினும் தொழிலாளர்களின் உண்மையான பிரதிநிதிகள் உத்தேச கமிட்டிகளில் இடம்பெற்று வேலை செய்யும் சந்தர்ப்பம் கிடைப்பதன்மூலம் தொழிலாளர்களின் குறைகள் ஓரளவு நீங்கமுடியும் என்றே சொல்லவேண்டும். எப்படியும் தொழிலாளர்களின் வெற்றியை யாரும் மறுக்கமுடியாது.

பொதுவாக சர்க்காரின் தொழில் கொள்கையை வரவேற்கத்தான் வேண்டும். எந்த அளவுக்கு அது அனுஷ்டிக்கப்படப் போகின்றது என்பதை இனித்தான்பார்க்கவேண்டும் உற்பத்திபெருக்கமே சர்க்கார் தொழில் கொள்கையின் அடிப்படை லட்சியம். உற்பத்தி பெருகவேண்டுமென்பதே மக்கள் விருப்பம். தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் அதற்கு முட்டுக்கட்டை போடாமல் இருக்க இந்திய சர்க்கார் தொழில் கொள்கையில் தொழிலாளர் நலனுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது வாஸ்தவமே. ஆயினும் இனி எடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பொருத்தே எல்லாம் இருக்கின்றது.

ஹைதராபாத்தில் இஸ்லாமிய ஆட்சி நடப்பதாகச் சொல்லுவது முட்டாள்தனமாகும் முகலாய ஆட்சியை மோசம்செய்து ஸ்தாபிக்கப் பட்டதும், திப்பு சுல்தானின் கொலையில் சம்மந்தப்பட்டதுமான ஆட்சி மறைந்தால் மூகல் அரசர்களின் ஆத்மாக்களும், திப்பு சுல்தானின் ஆத்மாவும் சாந்தியடைய முடியும். ஹைதராபாத்தில் உள்ள 90-சத விகித முஸ்லிமல்லாதாருக்கு இழைக்கப்படும் தீங்கு இஸ்லாமுக்கும் இஸ்லாமிய போதனைகளுக்கும் பெருங் களங்கமாகும். ஜாகீர்தார்களின் சூழ்ச்சிகளுக்கும் இஸ்லாமுக்கும் சம்மந்தமில்லை. அவ்வித ஆட்சியை தகர்ப்பதே முஸ்லிம்களின் கடமை

பிரிட்டிஷ் கொடியின்கீழ் திரண்டு ஈராக், அரேபிய புனித இடங்களில் போர்புரிந்த இந்திய முஸ்லிம்கள், இன்று எல்லைப்புற பாகிஸ்தான் கொள்ளைக்காரர்களை எதிர்த்து காஷ்மீர் அரங்கத்தில் போராடிக் கொண்டிருக்கும் இந்திய முஸ்லிம்கள், இந்தியாவுக்கும், ஹைதராபாத்துக்கும் இடையே போர் மூண்டால் ஹைதராபாத்தையும் எதிர்த்து சண்டை செய்வர் என்பது நிச்சயம். இந்திய முஸ்லிம்கள் தங்களுடைய சர்க்காருக்குத் துரோகம் செய்வரென்று நம்பி தன்னையும் மற்றவர்களையும் ஏமாற்றத்தில் வைத்திருப்பது காஸிம் ரஸ்வியின் மடமையாகும்.

இந்திய அரசாங்கத்தில் முஸல்மான்கள் சரியான பங்காளிகளாகவே இருக்கின்றனர். பரிபூரண பிரஜா உரிமைகள் அவர்களுக்கு இருந்துவருகின்றன. சில பொருப்பற்ற அதிகாரிகளால் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்கள் தற்காலீக மானவையே. சர்க்காரின் கொள்கைக்கும் அதற்கும் சம்மந்தமில்லை. இரண்டு நூற்றுண்டுகளாக ஆங்கிலேயர்களை எதிர்த்து அணி வகுத்து நின்ற முஸ்லிம்கள் இன்று கிடைத்திருக்கும் சுதந்திரத்தைக் காப்பாற்ற பண்டித நேருவின் வியர்வைக்கு பதிலாக தங்களுடைய ரத்தத்தை சிந்த தயாராய் நிற்கின்றனர். ரஸ்வியின் பிதற்றலுக்கு செவிசாய்க்க லட்சத்தில் ஒரு முஸ்லிமும் சம்மதிக்க முடியாது.

இந்திய முஸல்மான்களின்மீது இரக்கப் பட்டு ஹைதராபாத் பாஸிஸ்டுகள் வக்காலத்து வாங்கிப் பேச வேண்டிய அவசியமில்லை, உரிமையுமில்லை எனவே வாயை மூடிக்கொண்டு தங்களுடைய அக்ரமச் செய்கைகளின் விளைவுகளை அனுபவிக்கும் நாள் சமீபித்துக் கொண்டிருப்பதை அமைதி யிழந்த உள்ளத்துடன் எதிர்நோக்கி இருக்கும்படி ஹைதராபாத் பாஸிஸ்டுகளுக்கு யோஜனை கூருமலிருக்க முடியாது.

இந்திய முஸல்மான்களைக் குறித்து பேசும் உரிமை மௌலானா அபுல்கலாம் ஆஸாதுக்குத்தான் உண்டு ஐந்துகோடி முஸ்லிம்கள் சார்பில் அவர் தான் பேசமுடியும். அவருடைய பூட்ஸ்களை துடைத்துப் பாலிஷ் போடுவதற்கு யோக்கியதையற்ற காஸிம் ரஸ்விக்கு இந்திய முஸல்மான்கள் சார்பில் பேச உரிமையில்லை.

உமராபாத்

சென்னை அரசாங்க உள் நாட்டு இலாகா மந்திரி டாக்டர் P. சுப்பராயன் 2—4—48ல் மதரஸா தாருஸ்ஸலாமுக்கு விஜயம் செய்தார். ஸ்ரீமான்கள் N. அண்ணாமலைப் பிள்ளை M. L A, W. ஸ்ரீனிவாஸராவ் M. L. A, வரதாச்சாரியார் M. L. A., பெருமாள் சாமி ரெட்டியார் M L.C முதலியோரும் இருந்தனர். அரபி காலேஜ், ஆரம்ப, உயர்தர பாடசாலை, உமர் லைப்ரரி முதலியவைகளை கனம் மந்திரி பார்வையிட்டார். மதரஸா சார்பில் வரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. பிறகு நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சுற்றியுள்ளகிராமங்களில் நிலவும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை பாராட்டினர். உமர் லைப்ரரியில் அநேக மதிப்பு வாய்ந்த அருமையான புத்தகங்கள் தான் பார்த்ததையும், இங்கிலாந்து கிராமாந்திர வாசகசாலைகளிலும் கூட காணக் கிடைக்காத சில ஆங்கில புத்தகங்கள் அதில் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்

முடிவில் கான்பகதூர் காகா ஹாஜி முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள் வந்தனம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

உமராபாத் என்றவுடன் காகா இஸ்மாயில் சாகிபுடைய தந்தை காகா உமர் சாகிப் அவர்களை நினைக்காமலிருக்க முடியாது. தாருஸ்ஸலாம் மதரஸா அவருடைய ஞாபகார்த்தமாகும். தாருஸ்ஸலாம் மட்டுமின்றி இதர பல பொது ஸ்தாபனங்களுக்கும் ஜனுப் காகா இஸ்மாயில் சாகிபின் உதவி கிடைத்துவருகின்றது சென்ற மாதத்தில் “ஹஜ்” யாத்திரையிலிருந்து திரும்பினர். அரேபியாவிலேயே அவருடைய சஹதர்மினி இறைவனடி சேர்ந்துவிட்டார். காகா இஸ்மாயில் சாகிப், ஹாஜி M. அப்துர் ரஹ்மான் சாகிப் (சென்னை) போன்றவர்களை மட்டும் முஸ்லிம் செல்வந்தர்கள் பின்பற்றினல் முஸ்லிம்களை இன்று எதிர் நோக்கியுள்ள நெருக்கடியான நிலைமையை வெகு சுலபமாக சமாளிக்க முடியும் என்பதில் சந்தேகமே இல்லை. அதனல் சமூகம் மட்டுமின்றி சமுதாயமும் முன்னேறி தேசம் செழிததோங்க முடியும்.

தகராறு நமக்கு வேண்டாம்.

சோஷலிஸ்டுகள் காங்கிரஸிலிருந்து விலகி விட்டதைக் குறித்து எங்கும் பிரமாதமாய் பேசப்படுகிறது. இனி யாரை ஆதரிப்பது? எந்தக் கட்சியில் சேருவது? என்று கேட்குமளவுக்குக்கூட பல நண்பர்கள் வந்துவிட்டனர். மக்களிடையே போதிய அரசியல் விழிப்பு இல்லாமலிருப்பதே இதற்குக் காரணம். ஆகஸ்ட் 15-க்கு முன்னால் இருந்த மனப்பான்மை மக்களைவிட்டு இன்னும் நீங்கவில்லை. நிர்வாகத்தில் இருந்துவரும் குறைகளை எடுத்துச் சொன்ன மாத்திரத்திலே ஆகஸ்ட் 15-க்கு முந்திய காலத்தை அவர்கள் நினைக்க முற்பட்டுவிட்டனர். ஆகஸ்ட் 15-க்கு முன் அந்நிய சர்க்காரை குழிதோண்டிப் புதைப்பதற்காகவே இந்தியர்கள் அதை எதிர்த்து வந்தனர். இன்று நாட்டிலிருப்பது நம் சர்க்கார். நியாயமான முறையில் அதிலுள்ள குறைகளை சுட்டிக்காட்டினால் அது சர்க்காரை பலப்படுத்துவதற்காகவே யன்றி கவுப்பதற்காக அல்ல. அதற்கும் ஒரு வரையறை உண்டு வரையறைக்குட்பட்டு நிர்வாக இயந்திரத்திலிருக்கும் குறைகளை எடுத்துக்காட்டுபவர்கள் இந்த நாட்டின் நண்பர்களும் சர்க்காரின் விஸ்வாசிகளும் ஆவர். நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் நோக்கத்துடன் அனாவசியமாய் சர்க்கார்மீது குறை கூறி குழப்பங்களைத் தூண்டுபவர்களும், நல்லெண்ணத்துடன் நியாயமாக குறைகளை எடுத்துக்காட்டுபவரின் வாயடைக்கப்பார்ப்பவர்களும் இந்த நாட்டின் விரோதிகளே யாவர். உலக ஜனநாயக நாடுகளிலெல்லாம் குறைகளை எடுத்துக்காட்டுபவர்கள் (Critics) களுக்கே மதிப்பு கொடுக்கப்படுகின்றது. இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு இயற்கையாக அம்மாதிரியானவர்கள் இங்கும் தோற்றத்தான் செய்வார்கள். பதவிமோகம், சுயநலமின்றி குறைகளை எடுத்துக்காட்டி நிர்வாகத்தை செப்பனிட முயற்சிப்பவர்களை நாடு வரவேற்காமல் இருக்க முடியாது. இந்நிலையில் சோஷலிஸ்டு அன்பர்கள் காங்கிரஸைவிட்டு வெளியேறி யிருந்தால் அதைக்குறித்து யாரும் கவலைப்படக் காரணமில்லை. எதிர்ப்புக் கட்சியாக அமைந்து வேலைசெய்ய ஆரம்பித்த பிறகு பலப்பரீக்ஷை நடப்பதும் சாத்தியமே. அதனால் பொதுமக்கள் சோர்வடைய வேண்டியதில்லை காங்கிரஸ் வெற்றியடைந்தாலும், சோஷலிஸ்டு கட்சி வெற்றியடைந்தாலும் நாட்டிற்கு நன்மையே ஏற்படும். ஆனால் இவ்விரண்டிற்கும் நடக்கும் பலப்பரீக்ஷை மூன்றாம் பேர்வழிகளுக்கு இடமளிக்காமல் மட்டும் இருக்கவேண்டும். இவர்களுடைய போட்டா போட்டியில் சுயநலமில்லாமலிருந்தால் நன்மையே ஏற்படமுடியும். சுயநலம் புகுந்து கொண்டால் ஏற்படக்கூடிய தீமையை அளவிட முடியாது. பிறகு வகுப்புவாத பிற்போக்காளர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துவிடும் இன்று இங்கிலாந்தில் அட்லி சர்க்கார் இருந்துவருகிறது. எதிர்கட்சி தலைவர் சர்ச்சில், அட்லியைவிட தேசப்பற்றில் எவ்வகையிலும் குறைந்தவர் என்று சொல்லிவிட முடியாது. எனவே நேரு சர்க்காரையும் ஜெயப்பிரகாஷரையும் அப்படித்தான் கொள்ளவேண்டும். சோஷலிஸ்டு தலைவர்களை நாம் கௌரவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். காங்கிரஸ் தலைவர்களைப் போலவே அவர்களும் காங்கிரஸில் இருந்து இந்த நாட்டின் விடுதலைக்காக அரும்பணியாற்றி மாபெரும் தியாகங்களைச் செய்திருக்கின்றார்கள். இன்று காங்கிரஸிலிருந்து வெளியேறிவிட்ட மாத்திரத்திலே அவர்கள் மீது மக்கள் கொண்டுள்ள அன்பு நீங்கிவிடமுடியாது. இன்றைக்கும் ஜெயப்பிரகாஷ் நாராயண் மீது பண்டித நேருவுக்கு இருந்துவரும் அபார அன்பு இம்மியளவும் குறைந்துவிட்டதாக சொல்ல முடியாது காங்கிரஸை விட்டு விலகியபிறகு சோஷலிஸ்டுகளைப் பொருத்து எவ்வித அபிப்பிராயமும் தலைவர்கள் வெளியிடவில்லை. யுத்தமேகங்கள் சூழ்ந்துவரும் இச்சமயத்தில் அந்நியநாட்டு கையாட்கள் நாட்டின் அமைதியை குலைக்க சூழ்ச்சிகள் செய்துகொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் காங்கிரஸ், சோஷலிஸ்டு தகராறில் இறங்காமல் இருக்கவேண்டியது மக்கள் கடமை. நாட்டின் நலனும் முற்போக்குமே நம்முடைய குறிக்கோளாக இருக்கவேண்டும்.

"வானிஷ்"
கரப்பான், சொறி சிரங்கு.
பித்தவெடிப்பு, முகப்பருவிற்குச்
சிறந்தது.
மணி நேஷனல் பார்மஸி,
காரைக்குடி,

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.